# வாழ்க; தகைசால் தமிழர் ஆசிரியர் வீரமணி!

தமிழ்நாடு அரசின் “தகைசால் தமிழர் விருது” இம்முறை மானமிகு ஆசிரியர் வீரமணி அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது! விருது அறிவிக்கப்பட்ட முதலாண்டு கம்யூனிஸ்ட் இயக்க மூத்த தலைவர் சங்கரையாவுக்கு வழங்கப்பட்டது! அடுத்த ஆண்டு நல்லகண்ணுவுக்கு வழங்கப்பட்டது. அப்போதே அந்த விருது பெருமைப்பட்டது; இந்த ஆண்டு ஆசிரியர் வீரமணி அவர்களுக்கு அந்த விருதினை தமிழ்நாட்டு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வழங்கி, அந்த விருதுக்குப் பெருமை சேர்த்ததுடன் அதற்கு மெருகும் தீட்டியுள்ளார்.



**ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக 10 வயதிலே மைக்கைப் பிடித்துக் கொள்கைப் பிரச்சாரம் செய்யத் துவங்கி, 90 வயது கடந்தும் தான் வரித்துக் கொண்ட கொள்கையிலிருந்து தடம்மாறாது, அதனால் ஏற்படும் ஏற்றம் இறக்கம் குறித்து சிறிதும் கவலைப்படாது, அதே நேரத்தில் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்கிற உத்வேகத்தோடு சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் அந்தத் தன்னலமற்ற தியாகச் செம்மலுக்கு இந்த விருது கிடைத்ததால், விருது பெருமை பெற்றுள்ளது!**

ஆசிரியர் வீரமணி அவர்களைப் பொறுத்தவரை அவர் விருது, பதவி, இவைகளை விட தந்தை பெரியாரின் உண்மைத் தொண்டன், அவரது கொள்கை விசுவாசி என்ற முத்திரை தன்மீது பதிக்கப்படுவதையே விரும்பியவர்! அவரது அரசியல் வாழ்வில் என்றுமே பட்டம், பரிசுகள் பெற வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்கியதே இல்லை. அவர் மட்டும் விரும்பியிருந்தால் எத்தனையோ பெரிய பதவிகளைப் பெற்றிருக்க முடியும்!

**தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் தவிர்த்த அரசியல் எடுபடாது என்ற நிலையில், திராவிட இயக்கப் போர்வையில் தோன்றிய சில புது இயக்கங்கள் தங்கள் இயக்கத்துக்கு திராவிட இயக்க அங்கீகாரம் பெற்றிட ஆசிரியர் வீரமணியின் கடைக்கண் பார்வை கிட்டாதா என்று காத்திருந்த காலங்கள் உண்டு!**

அந்தக் காலகட்டங்களில் மானமிகு வீரமணி நினைத்திருந்தால், எத்தனையோ பதவிகளை, பரிசுகளை ஏற்று ராஜவாழ்க்கை நடத்தியிருக்க இயலும்! அந்த நேரங்கள்கூட அவரை அசைத்திட முடியவில்லை! அவரது அரசியல் வாழ்வு என்பது அர்ப்பணிப்பு வாழ்வாகவே அமைந்துவிட்டது! அதுமட்டுமல்ல; நமது இளைஞர்களுக்கு அது ஒரு பாடமாக அமைந்துள்ளது!

இன்றைய இளைஞர்களில் பலர் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள் போன்ற பதவிகளுக்காக அரசியல் இயக்கங்களில் தங்களை இணைத்துச்செயல்படுவதைக் காண்கிறோம்! ஆனால் பத்து வயது பாலகனாக அன்று அரசியலில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்படத் துவங்கிய ஆசிரியர் வீரமணி அவர்கள், 90 வயதைக் கடந்தும் எந்தப் பதவியும் எதிர்பாராது தந்தை பெரியாரின் சாதி, மத, பேதமற்ற சமத்துவ சமுதாயம் தமிழ்நாட்டில் உருவாக வேண்டும் - அதற்கு உழைப்பவர்களுக்கு உறுதுணையாகச் செயல்படுவேன் என்ற உள்ளார்ந்த உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்!



“தகைசால் தமிழர் விருது”க்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் வீரமணி, தலைவர் கலைஞர் ஒருமுறை குறிப்பிட்டபடி,

**“பத்து வயது முதற்கொண்டே பெரியாருடன் பணிபுரிந்துகொண்டு, பள்ளியிலும் பயின்று, கல்லூரியிலும் பட்டம் பெற்று திராவிடர் கழகத்தின் ஓய்வறியாத் தொண்டனாக விளங்கிய வீரமணி, இளந்தளிர்ப் பருவத்திலே மேடையிலே பேசுகிற வியப்புமிகு நிகழ்ச்சியைக் காணப் பெருங்கூட்டம் திரளும்”.**

**- ஆம், தன் தளிர் பருவத்திலேயே ஆற்றலை அள்ளித்தெளித்த அந்தப் பெருமகன்தான் இன்று “தகைசால் தமிழர்” விருதைப் பெறுகிறார்!**

## முரசொலி செல்வம்

இந்த விருதுக்கு ஆசிரியர் வீரமணியைத் தேர்ந்தெடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஸ்டாலினை எப்படிப் புகழ்வது என்றே புரியவில்லை. அன்று பெரியவர் சங்கரையா தேர்வு முதற்கொண்டு, இன்று ஆசிரியர் வீரமணி தேர்வு வரை அவரது முடிவுகள் தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் ஆழ்ந்த - தெளிந்த முதிர்ச்சிக்கு அடையாளங்களாக வெளிப்படுகின்றன!

இன்றைய கால கட்டங்களில் பலநேரங்களில் பலருக்குத் தரப்படும் பட்டங்கள் - பவிசு இழந்து நிற்கும் நிலையில், பத்தோடு இதுவும் ஒன்றுதானே என்ற பரிதாப நிலையை அடைந்திடும் நேரத்தில், முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் ‘தகைசால் தமிழர்’ பட்டங்களுக்குத் தேர்ந்தெடுக்கும் தகுதிமிக்கவர்களால், ஆற்றலாளர்களால், தன்னலமற்று சமுதாய சேவை செய்பவர்களால் அந்தப் பட்டங்கள் மீண்டும் பெருமை பெறத் தொடங்கிவிட்டன.

**வாழ்க; தகைசால் தமிழர் ஆசிரியர் வீரமணி!**

---

### பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள்

# ஒன்றிய அரசின் பங்குகளை குறைத்துள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 3-

பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்கள் ஒன்றிய அரசின் பங்குகளை குறைத்துள்ளதா? மேலும் தமிழ்நாடு உட்பட மாநிலம்/ யூனியன் பிரதேசம் வாரியாக பாதுகாப்பு வழித்தட திட்டங்களில் தனியார் துறையின் பங்கேற்பு விவரம் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரம் வருமாறு:-

பாதுகாப்புத் துறையில் ஒன்றிய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் கூட்டு முயற்சி திட்டங்களில் கையெழுத்திட்டுள்ளதா, அப்படியானால்,

அதன் விவரங்கள்? கடந்த ஐந்தாண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், ஆண்டு வாரியாக பாதுகாப்புத் துறையில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்குகளின் விகிதம்;

கடந்த ஐந்தாண்டுகளில் அரசு பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களில் ஒன்றிய அரசின் பங்குகளை குறைத்துள்ளதா?, அப்படியானால், அதன் விவரங்கள்;

தனியார்/கார்ப்பரேட் பங்குகளின் திடீர் அதிகரிப்பு மற்றும் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களில் கடந்த ஐந்தாண்டுகளில் அரசின் பங்குகள் குறைந்ததற்கான காரணங்கள் யாவை?

நாட்டில் தமிழ்நாடு உட்பட மாநிலம்/ யூனியன் பிரதேசம் வாரியாக பாதுகாப்பு வழித்தட திட்டங்களில் தனியார் துறையின் பங்கேற்பின் விவரங்கள் என்ன?

அதற்கு ஒன்றிய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர்அஜய் பட் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

மேலே கோரப்பட்டுள்ள கேள்வியில் பாதுகாப்புத் துறையில் ஒன்றிய அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் கூட்டு முயற்சி திட்டங்களில் கையெழுத்திட்டுள்ளதா? என்ற பகுதிக்கான தகவல் உணர்வு பூர்வமானது. மேலும் தேசிய பாதுகாப்பு நலன் கருதி நாடாளுமன்ற அவையின் தளத்தில் அதை வெளியிட முடியாது.

பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களில் (DPSUS இல்) ஒன்றிய அரசு மற்றும் தனியார்/பொது நிறுவனங்களின் பங்குகளின் விகிதம் பின்வருமாறு:

ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனத்தில்

2018-19 89.97% 10.03%

2019-20 89.97% 10.03%

2020-21 75.15%. 24.85%

2021-22 75.15% 24.85%

இது தவிர,

1. பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்

பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட் (பிஇஎம்எல்)

பாரத் டைனமிக்ஸ் லிமிடெட்

Mazagon Dock Shipbuilders Limited

கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ்&இன்ஜினியர்ஸ் லிமிடெட்

கோவா ஷிப்யார்ட் லிமிடெட்

ஹிந்துஸ்தான் ஷிப்யார்ட் லிமிடெட் போன்ற மேலே கூறப்பட்டவை தவிர, 7 புதிய பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் அக்டோபர் 1, 2021 அன்று 100% அரசுக்கு சொந்தமான பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களாக இணைக்கப்பட்டன. அவை ஆயுத தொழிற்சாலைகள் வாரியத்தின் கீழ் 41 பழைய ஆயுத தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டன. இந்த 7 புதிய பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள்

1. மேம்பட்ட ஆயுதங்கள் மற்றும் கருவிகள் இந்தியா லிமிடெட்

2. கிளைடர்ஸ் இந்தியா லிமிடெட் ,

3. ட்ரூப் கம்போர்ட்ஸ் லிமிடெட் ,

4. கவச வாகனங்கள் நிகாம் லிமிடெட்

5. மியூனிஷன்ஸ் இந்தியா லிமிடெட் ,

6. யந்த்ரா இந்தியா லிமிடெட். மற்றும்

7. இந்தியா ஆப்டெல் லிமிடெட்.

நடப்பு ஆண்டில் அனைத்து பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களிலும் ஒன்றிய அரசின் பங்கு 2022-23 ஆண்டைப் போலவே உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில், ஒன்றிய அரசு

அதன் பங்குகளை முழுமையாக குறைக்கவில்லை. இருப்பினும், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட், பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட், பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் மற்றும் மசாகன் டாக் ஷிப்பில்டர்ஸ் லிமிடெட் ஆகிய நான்கு DPSU களில் ஒன்றிய அரசு அதன் பங்குகளை குறைத்துள்ளது.

2020-21 நிதியாண்டில் பத்திரங்கள் (ஒப்பந்தம்) ஒழுங்குமுறைச் சட்டம் 1956 மற்றும் அரசாங்கத்தின் முதலீட்டுக் கொள்கை விதிகளின் கீழ் தேவைப்படும் குறைந்தபட்ச பொது பங்குதாரர் விதிமுறைகளுக்கு இணங்க DPSUS இல் பங்குகள் முதன்மையாகக் குறைக்கப்படுகின்றன.

மேலும் தமிழ்நாடு உட்பட மாநிலம்/ யூனியன் பிரதேசம் வாரியாக பாதுகாப்பு வழித்தட திட்டங்களில் தனியார் துறையின் பங்கேற்பின் விவரங்கள் என்ன? என்பதற்கான பதில்/தகவல் உணர்வுபூர்வமானது மற்றும் தேசிய பாதுகாப்பு நலன் கருதி அவையின் தளத்தில் வெளியிட முடியாது இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

---

# மதத்தின் பெயரிலான வன்முறையை பொறுத்துக் கொள்ள இயலாது!

## மல்லிகார்ஜுன கார்கே எச்சரிக்கை!

புதுடெல்லி, ஆக.3-

இந்தியாவில், 21ஆம் நூற்றாண்டில் மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறையை பொறுத்துக் கொள்ள முடியாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியதாவது:-

இந்தியாவில் மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறையை பொறுத்துக் கொள்ள முடியாது என்றும், இதுபோன்ற பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக மக்கள் ஒன்றுபடாவிட்டால், அதன் விளைவுகளை வரும் தலைமுறையினர் அனுபவிக்க நேரிடும் என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

மேலும் அண்மையில் ஹரியானாவில் நடக்கும் வன்முறை மற்றும் ஆர்.பி.எஃப் கான்ஸ்டபிள் துப்பாக்கிச் சூடு மனதில் ஆழமான வலியை ஏற்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.



தொடர்ந்து, “சமூகத்தின் கட்டமைப்பில் காணப்படும் சிதைவின் போக்கு, அதிகார பேராசையில் சமூகத்தில் வெறுப்பை பரப்புவதன் விளைவு” என்று தெரிவித்தார். மேலும், ““பொதுமக்களுக்குள் பகைமையின் விஷத்தைக் கலந்து, ஒருவரையொருவர் சண்டையிட வைப்பது நமது அரசியலமைப்பை கேலி செய்வது போன்றது” என்றார்.

ஹரியானாவில் நுஹ் பகுதியில் நிகழ்ந்த வன்முறையில் 4 பேர் கொல்லப்பட்டனர். குருகிராமில் உள்ள மசூதி ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது. இமாம் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதனால் அங்கு பதற்றம் நிலவுகிறது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

---

### ‘நான் முதல்வன்’ - போட்டித் தேர்வுப் பிரிவு - தமிழ்நாடு அரசின்

# யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வுக்கான ஊக்கத் தொகைத் திட்டம்!

## ‘நான் முதல்வன்’ திட்ட இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, ஆக.3-

‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2023-24 க்கான தமிழ் நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச்செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிவிக்கப் பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். இது சமீப காலமாக UPSC சிவில் சர்வீசஸ் தேர்வில் தேர்ச்சி பெறும் தமிழக மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் விகிதத்தை மாற்றியமைக்க தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டிருக்கும் மாபெரும் முயற்சியாகும்.

இதன்படி TNSDC, அதன் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக UPSC முதல் நிலை தேர்வின் ஊக்கத் தொகைக்கான மதிப்பீட்டுத் தேர்வை 10.09.2023 அன்று நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 1000 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக மாதம் 7500 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படும்.

ஏற்கனவே அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் கீழ் இயங்கி வரும் அகில இந்திய குடிமை பணிகள் பயிற்சி மையங்களுக்கான (ஆர்.ஏ.புரம் சென்னை, பாரதியார் பல்கலைக்கழகம் கோவை மற்றும் காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை) நுழைவுத் தேர்வும் இதில் ஒருங்கிணைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மதிப்பீட்டுத் தேர்வை எழுதி ஊக்கத் தொகை பெற விரும்பும் ஆர்வமுள்ள மாணவர்கள், https://www.naanmudhalvan.tn.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விரிவான அறிவிக்கையைப் படித்து பார்த்து, 02.08.2023 அன்று முதல் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 17.08.2023 ஆகும்.

அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி 02.08.2023

ஆன்லைன் விண்ணப்பம் தொடங்கும் தேதி 02.08.2023

விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 17.08.2023

நுழைவுச் சீட்டு வெளியீடு 30.08.2023

தேர்வு நாள் 10.09.2023 (10.00 am - 1.00 pm)

இவ்வாறு - தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ‘நான் முதல்வன்’ திட்ட இயக்குநர் (போட்டித் தேர்வுகள்) அறிவித்துள்ளார்.

---

### சுதந்திர நாள் விழா ஒத்திகை:

# சென்னையில் போக்குவரத்து மாற்றம்!

சென்னை, ஆக.3-

சென்னையில் சுதந்திர தினவிழா ஒத்திகை நிகழ்வுக்காக ஆகஸ்ட் 4, 10, 13 ஆகிய தேதிகளில், போக்குவரத்து மாற்றம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் ஒத்திகை முடியும் வரை வாகனங்கள் மாற்றுப்பாதையில் மாற்றிவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 76 வது சுதந்திர தினவிழா வருகின்ற ஆகஸ்ட் 15ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. சென்னை கோட்டை கொத்தளத்தில் சுதந்திர நாள் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றி வைக்க உள்ளார்.

சுதந்திர தினவிழாவை ஒட்டி காவல்துறை மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் அணிவகுப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். இதற்காக சில நாள்களுக்கு முன்னரே ஒத்திகை நிகழ்ச்சி நடைபெறும்.

இந்நிலையில், 76 வது சுதந்திர தினவிழா ஒத்திகை நிகழ்ச்சிகள் ஆகஸ்ட் 4 ,10, 13 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது.

இதனால், ஆகஸ்ட் 4 ,10, 13 ஆகிய தேதிகளில் போக்குவரத்துமாற்றம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேப்பியர் பாலம் முதல் போர் நினைவுச் சின்னம் வரையிலான சாலை, காமராஜர் சாலை, ராஜாஜி சாலை, கொடிமரச்சாலையில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்படும் என போக்குவரத்து காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.